[1978 மார்ச் 1

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அப்படி ஒரு திட்டம் வருமானுல், அதைப் பரிசீலிக்கலாம்.

சென்னை புளியந்தோப்பு இறைச்சிக்கூடம்.

* 332 வினு— திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னை புளியந்தோப்பு பகுதியில் மாநகராட்சி மூலம் கண்காணிக்கப்படும் ஆடு, மாடுகள் வெட்டப்படும் இறைச்சிக் கூடத்தினை நவீன கூடமாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அந்தக் கூடமும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதைச் சீர்படுத்தத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சென்னைக்கு 25 மைல் தொலைவில் உள்ள திருவள்ளூர் சாலையில் ரெட்ஹில்ஸ் அருகிலுள்ள கொடிவெள்ளி கிராமத்தில் நவீன முறையில் அதை அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, புளியந் தோப்பில் உள்ள ஆடு மாடுகள் வெட்டும் நிலையத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு வியாதி, நோய் உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிறுர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய விவரம் இல்லை.

ஸ்டான்லி மருத்துவமனை அருகே புதிய சுரங்கப்பாதை

*333 வினு— திரு. அ. செல்வராசன், திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, ஸ்டான்லி மருத்துவமனை (புறநோய்ப் பிரிவு அருகில் இருக்கும் M. C. ரோட் ரயில் பாதையின் குறுக்கே ஒரு சுரங்கப்பாதை (Subway) ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

1978 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. அ. செல்வராசன் : தலைவர் அவர்களே, இந்த எம்.சி. ரோட்டிலே சுரங்கப் பாதை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சித்தாபுதூரில் வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கீடு

* 334 வினு— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம், முதல் வார்டு, சித்தாபுதூரில் உள்ள ஹவுஸிங் யூனிட்டைச் சேர்ந்த வீடுகளில் குடியிருக்க விண்ணப்பம் போட்டவர்களுக்கு வீடுகளை ஒதுக்கிக் கொடுப்பதில் முறை கேடுகள் ஏற்பட்டுள்ளது குறித்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளதா;

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை நகரம்' சித்தாபுதூர் காலனியில் 1972, 1975 மற்றும் 1976 ஆண்டுகளில் வீடுகளை ஒதுக்கீடு செய்து கொடுப்பதில் முறைகேடுகள் ஏற் பட்டுள்ளதாக முறையீடுகள் ஏதும் அரசு பெறவில்லையெனுலும் சில முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதை அரசு அறிந்து தவருன ஒதுக்கீடுகளைச் சரிபார்த்து உண்மையிலே குடிசை வாசிகள் அல்லாத முறைகேடான ஒதுக்கீடுதாரர்களை வெளியேற்றவும், நிரூபிக்கப்படும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படியும் வீட்டு வசதி வாரியத் தலைவருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, உண்மையிலேயே அந்த வீடுகள் முனிசிபல் தொழிலாளர்களுக்கு வசதி செய்யப்படுவதற்காக அரசாங்கத்தால் கட்டப்பட்டது. ஆனுல் இப்போது யாருக்குக் கொடுப்பதற்காகக் கட்டப்பட்டதோ அவர்கள் தெருவிலே நிற்கிருர்கள். மற்றவர்கள்தான் அமைச்சர் சொன்ன மாதிரி, letting and sub-letting மாதிரி இருக்கிறது. ஆகவே அவர்களை வெளியேற்றி, தொழிலாளர் களுக்கு வசதி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இது எவ்வளவு குறைந்த காலத்தில் செய்யப்படும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.